DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No. 216/2022 |
| Session | ... | |
| | | Prosecution / PW-1 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

Name : திருமதி.தமிழ்ச்செல்வி

Father's Name (or)

Husband Name : க/பெ.சசிக்குமார்

Village : வி.பரமக்குடி

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

(Accused absent U/s.317 Cr.P.C petition filed heard and allowed.)

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 13.03.2023

---

**முதல் விசாரணை**

1. நான் வி.பரமக்குடி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் ஆர்.எஸ்.மங்கலத்தில் அமுல் ஐஸ்கிரிம் கடை நடத்தி வருகிறேன். எதிரியை தெரியும்.

2. 28.11.2021ம் தேதி இரவு 09.40 மணியளவில் நானும் எனது கணவர் மற்றும் எனது குழந்தைகளுடன் வி.பரமக்குடிக்கு காரில் வந்தோம். அப்போது வரவழியில் முனிஸ்வரன் என்பவர் எங்கள் காரை இருசக்கர வாகனத்தை வைத்து வழிமறித்து இருசக்கர வாகனத்தை ரேஸ் செய்து எனது கணவரை கொலை செய்துவிடுவேன், தொழில் செய்ய விடமாட்டேன், கொம்மா. நோத்தா தேவிடியா பயன் என்று கெட்ட வார்த்தையால் பேசினார்.

3. நான் காரை விட்டு இறங்கி எங்களை இறக்க தானே காரை நிறுத்தினார் ஏன் இவ்வாறு அசிங்கமாக பேசுகிறீர்கள் என எதிரியை கேட்டதற்கு எதிரி என்னையும் மேற்சொன்ன அதே வார்த்தைகளால் என்னை திட்டியும், மேலும் முண்டை என கெட்ட வார்த்தைகளால் திட்டி உன்னை கூட்டி கொடுத்து தான் உனது கணவர் கோடீஸ்வரர் ஆனார் என்று சொன்னார்

4. உன்னையும் உனது குழந்தைகளையும் கொன்று விடுவேன் என்று மிரட்டினார். எனது கணவருக்கு எப்படி குழந்தை பிறந்தது தெரியுமா என்று என்னிடம் கேட்டார். ஏன் இவ்வாறு அபாண்டாமாக பேசுகீறீர்கள் என்று நான் எதிரியிடம் கேட்டதற்கு எதிரி பைக்கில் இருந்து இறங்கி என்னை பிடித்து தள்ளிவிட்டார்

5. எனது கணவர் காரில் இருந்து இறங்கி என்னை தாங்கி பிடித்தார். இதற்கிடையில் என் குரல் மற்றும் எனது குழந்தைகள் அலறல் சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தினார் திரண்டனர். அவ்வழியாக சென்ற நபர் பைக்கில் இருந்து இறங்கி எதிரியை தள்ளிக்கொண்டு போய் ரோட்டிற்கு அந்த பக்கம் கொண்டு சென்றுவிட்டார். மற்றவர்கள் பைக்கை

அப்புறப்படுத்தினார்கள். சம்பவ சமயத்தில் எதிரி மதுபோதையில் இருந்தார்.

6. பின்பு நான் வீட்டிற்கு வந்தபிறகு 100 க்கு போன் செய்தேன். இரவு 10.40 மணிக்கு ஆர்.எஸ்.மங்கலம் காவல் நிலையத்தில் இருந்து இரண்டு காவலர்கள் வந்தார்கள். என்னிடம் விவரம் கேட்டார்கள். போலீசார் எதிரியை தேடினார்கள் அவர் அங்கு இல்லை.

7. மறுநாள் காலையில் என்னை காவல் நிலையத்திற்கு வந்து புகார் அளிக்குமாறு சொன்னார்கள் நானும் காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். என்னிடம் காட்டடப்படும் புகார் மனு தான் அது நான் என் கைப்பட எழுதினேன் **(அந்த புகார்மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் என்னை விசாரித்தார்கள். பின் மூன்று நாள் கழித்து தான் எனக்கு CSR கொடுத்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை அதனால் குறுக்க விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.